**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.166/2022 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தையல்நாயகி | தொழில் | |
| த.பெ. | | | மதம் |
| கிராமம் | | சாதி | |
| வயது | | | வட்டம் |

**முதல் விசாரணை - 22.02.2024**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 9 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Ex.A.1 – Original Mortgage deed executed by the Defendant in favour of Plaintiff Mrs.S.Thaiyalnayagi dated 15.10.2012.
2. Ex.A.2 – Original Promissory note executed by the Defendant infavour of Plaintiff Mrs.S.Thaiyalnayagi dated 04.12.2019.
3. Ex.A.3 – Original Legal Notice sent to Defendant by Plaintiff dated 23.09.2021.
4. Ex.A.4 – Original Postage Acknowledgement Card dated 24.09.2021.
5. Ex.A.5 – Original Reply Notice from Defendant to Plaintiff dated 04.10.2021.
6. Ex.A.6 – Original Rejoinder Notice from Plaintiff to Defendant dated 12.12.2021.
7. Ex.A.7 – Original Postage Acknowledgement Card dated 16.12.2021.
8. Ex.A.8 – Xerox copy of Rental Agreement beetween Defendant and his Tenant dated 16.05.2013.
9. Ex.A.9 – Discharges promissory noties – 9 Nos. (Teared original & Xerox PNs)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நான் வீட்டில்தான் இருக்கிறேன். யாராவது பணம் கேட்டால் கொடுப்பேன். பணம் யார் மூலமாக வாங்கி கொடுப்பேன் என்றால் என்னுடைய அக்கா, தங்கைகள் வசதியானவர்கள், அவர்கள் பணம் கொடுத்தால், அதை வாங்கி கொடுப்பேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். எவ்வளவு பணம் கேட்டாலும் கொடுப்பேனா என்றால் எனக்கு தெரிந்தவர்கள் கஸ்டம் என்று கேட்டால் கொடுப்பேன். பிரதிவாதிக்கு தான் அதிகமாக பணம் கொடுத்துள்ளேன். எனது வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். நான் யாருக்கு பணம் கொடுத்தேன் என்றால் பிரதிவாதி கிருஷ்ணகுமாருக்கு கொடுத்தேன். கிருஷ்ணகுமாரை எப்படி தெரியும் என்றால் என் வீட்டில் குடியிருந்தார். எவ்வளவு நாட்கள் என் வீட்டில் பிரதிவாதி குடியிருந்தார் என்றால் 7, 8 வருடங்கள் குடியிருந்தார், எந்த வருடத்திலிருந்து குடியிருந்தார் என்பது ஞாபகமில்லை. பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை முதலில் கொடுத்தேன் என்றால் 15.10.2012 அன்று பிரதிவாதி வீடு கட்டுவதற்காக பத்திரத்தை அடமானம் வைத்து ரூ.3,00,000/- கடன் வாங்கினார். பிரதிவாதி வீடு கட்டும் இடத்தை நான் போய் பார்த்தேனா என்றால் பார்த்தேன், எங்கள் ஏரியாவில்தான் உள்ளது. அந்த இடம் காலியாக இருந்ததா என்றால் காலியாகத்தான் இருந்தது. பிரதிவாதி ரூ.3,00,000/- கடன் வாங்கியதற்கு எவ்வளவு நாட்கள் வட்டி கொடுத்துள்ளார் என்றால் 04.12.2019 வரை வட்டி கொடுத்துள்ளார். வட்டி மட்டும்தான் கொடுத்தாரா என்றால் வட்டி மட்டும்தான் கொடுத்தார், அசல் கொடுக்கவில்லை. மாத, மாதம் வட்டி எவ்வளவு கொடுத்தார் என்றால் 24 சதவீதம் என்று மாத வட்டி கொடுத்தார். வட்டி கொடுத்ததற்கு ஏதாவது ரசீது கொடுத்தேனா என்றால் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதி வட்டி பணத்தை ரொக்கமாக கொடுத்தார். பிரதிவாதி இதுவரையில் எவ்வளவு பணம் வாங்கியுள்ளார் என்றால் 6, 7 முறை பணம் வாங்கி திருப்பி கொடுத்து வாங்கியுள்ளார். 04.12.2019 அன்று ரூ.21,00,000/- பிரதிவாதி என்னிடம் கடனாக வாங்கினார். பிரதிவாதி என்னிடம் மொத்தம் ரூ.24,00,000/- வாங்கியுள்ளார். 2019 வரை ரூ.3,00,000/-க்கான வட்டியை பிரதிவாதி கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். ரூ.21,00,000/-யை

எப்பொழுது கொடுத்தேன் என்றால் ரூ.10,00,000/-மும், ரூ.9,55,000/-மும், ரூ.1,45,000/-மும் கொடுத்தேன். மேற்படி 3 தொகைகளும் சேர்த்து 04.12.2019 அன்று ரூ.21,00,000/- பிரதிவாதி என்னிடம் வாங்கினார். பிரதிவாதி வீடு கட்டுவதற்காக நான் பணம் கொடுத்தேனா என்றால் வீடு கட்டுவதற்காகவும், ரியல் எஸ்டேட் செய்வதற்காகவும் வெளியில் பணம் கொடுப்பதற்காகவும் நான் பணம் கொடுத்தேன். ரூ.21,00,000/- வாங்கியதற்கு பிரதிவாதி பத்திரம் எதுவும் கொடுத்தாரா என்றால் ரூ.3,00,000/- கடன் வாங்கியதற்கு கொடுத்த அடமான பத்திரமே போதும் என்று சொன்னார். பிரதிவாதி 2012லேயே வீடு கட்டி கிரகபிரவேசம் செய்து முடித்துவிட்டார் என்றால் கிரகபிரவேசம் செய்தார், ஆனால் அதன் பிறகும் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கினார். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தபோது வேறு யாராவது உடன் இருந்தார்களா என்றால் என் மகள் விசாலாட்சி, என் அண்ணன் மகன் பழனியப்பன் ஆகியோர்கள் உடனிருந்தார்கள். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியபோது ஒவ்வொரு முறையும் என் மகள் உடனிருப்பாள், பழனியப்பனும், பிரதிவாதியின் மனைவி லட்சுமியும் உடனிருப்பார்கள். பிரதிவாதிக்கு நடுவில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான், நான் பிரதிவாதியை சென்று பார்த்தேன், பிரதிவாதிக்கு என்ன உடல்நிலை சரியில்லை என்று எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகள்கள். பிரதிவாதியின் இடத்தை நானோ அல்லது பழனியப்பனோ விலை பேசினேமா என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் எத்தனை கடனுறுதி சீட்டு கொடுத்தார் என்றால் நிறைய முறை கடனுறுதி சீட்டு கொடுத்து திரும்ப வாங்கி சென்றார். சாட்சி மீண்டும் 6, 7 முறை கடனுறுதி சீட்டு கொடுத்துள்ளார். பிரதிவாதி பணம் கொடுத்தவுடன் அந்த கடனுறுதி சீட்டுகளை பிரதிவாதிக்கு திரும்ப கொடுத்துள்ளேன். பிரதிவாதிக்கு 2019ல் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது என்னிடம் பணம் கேட்டாரா என்றால் கேட்கவில்லை. பிரதிவாதி பணத்தை திருப்பி கொடுத்த பிறகு கடனுறுதி சீட்டை திருப்பி கேட்டு, கொடுக்காததால் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொன்னார் என்றால் பிரதிவாதி பணத்தை கொடுத்தவுடன் கடனுறுதி சீட்டுகளை திருப்பி கொடுத்துவிட்டேன். பிரதிவாதியின் வீட்டை நான் வாங்கவேண்டுமென்ற நோக்கத்தில் பிரதிவாதி என்னிடம் ரூ.21,00,000/- வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், பிரதிவாதி என்னிடம் ரூ.3,00,000/-தான் கடன் வாங்கினார்

என்றும், அதற்கான வட்டியும் அசலும் திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூ.21,00,000/- கடன் வாங்கியபோது உடனிருந்த சாட்சிகள் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் சாட்சியம் அளிக்க வருவார்கள்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.166/2022** **P.W.2**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | விசாலாட்சி | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 10.08.2024**

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் குறியீடு இல்லை.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)